**கவனிக்க.-** *2010.07.02 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி III மற்றும் IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

**கவனிக்க.-** *இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV(ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழியில் தனியாகப் பிரிசுரிக்கப்பட்டுள்ளன.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1662 - 2010 ජූලි මස 09 වැනි සිකුරාදා - 2010.07.09**

*1662 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1214 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஊவாமாகாண சபை

*ஊவா மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்கம் கொண்ட கால்நடை உற்பத்தி சுகாதார கொள்கைச் சுருக்கப்பிரதி*

*இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 10 நாட்கள் கடந்த பின்னர் ஊவா மாகாண சபைக்கு முன்வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கையில் அடங்கிய விடயங்கள் சம்பந்தமாக ஏதாவது விடயம் முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாயின் இந்த அறிவித்தலின்படி 10 நாட்களுக்குள் அந்த விடயம் எனக்கு அறிவிக்க வேண்டும்.*

*அநுர ரவிந்திர விதானகமகே,*
*விவசாய, கமநல அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி,*
*நன்னீர் மீன்பிடித்துறை, சுற்றாடல் மற்றும் சுற்றுலாத்துறை*
*நடவடிக்கைகள் பற்றிய அமைச்சர்,*
*ஊவா மாகாண மாகாண சபை.*

### ஊவா மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்கம் கொண்ட கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய நியதிச் சட்டம்

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் 9 ஆவது உப பட்டியலின் 1 ஆவது தொகுதியில் இலக்கம் 20 இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய சேவைகளை பயன்தரக் கூடியதும் திறமைமிக்கதுமான நடத்திச் செல்வதற்காக கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய திணைக்களமொன்றை நிறுவுவதும் அதோடு தொடர்புடைய விடயங்களுக்கான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் முகமான நியதிச் சட்டமாகும்.*

*இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையினால் இவ்வாறு விதந்துரைக்கப்படு கிறது:-*

*சுருக்கப் பெயரும் நடைமுறைப்படுத் தப்படும் தினமும்.*

*1. இந்த நியதிச் சட்டம் ஊவா மாகாண மாகாண சபையின் 2009 ஆம் ஆண்டின் ..... ஐக் கொண்ட கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய நியதிச் சட்டமென குறிப்பிடப்படுவதுடன் அது ஊவா மாகாண ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைக்கும் திகதியிலிருந்தோ தீர்மானிக்கப்படும் வேறொரு தினத்திலிருந்து நடைமுறைப்படுத்த அதிகாரமுடைத்ததாகும்.*

*திணைக்கள மொன்றை நிறுவுதலும் அமைப்பும்.*

*2.1 இந்நியதிச் சட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய திணைக்களமொன்று நிறுவப்பட வேண்டுமென்பதுடன் அதன் தலைவராக கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் சேவை 1 ஆம் தரத்தின் அதிகாரியொருவர் ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும். அத்திணைக்களத்திற்குரிய அமைப்பு வியூகம் உப பட்டியல் இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ளது.*

*2.2 இத்திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் மேலதிகப் பணிப்பாளர், பிரதிப் பணிப்பாளர்களும் வேறு உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டும். இந்த ஆளணியினரை நியமித்தல், இடமாற்றம் செய்தல் அவர்களது விடயத்தில் ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல் போன்ற அதோடு தொடர்புடைய விடயங்கள் சம்பந்தமாக 1987 ஆம் ஆண்டின் இலக்கம் 42 ஐக் கொண்ட மாகாண சபைகள் சட்ட ஒழுங்குகள் வலுவுடையதாக இருக்கும்.*

*2.3 திணைக்களத்தின் பணிகளை நிறைவேற்றத் தேவையான மாவட்ட, பிரதேச, கிராம மட்டத்திலான நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட முடியும்.*

*2.4 இந்நியதிச் சட்டத்தின் விடயங்களுக்காக நியமிக்கப்படும் அதிகாரிகளும் ஊழியர்களும் ஸ்தாபனக் கோவையில் (மாகாண சபை ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்ததன் பின்) உள்ளவாறு மாகாண அரச சேவையில் உள்ளவர்களாக கருதப்பட வேண்டும்.*

*2.5 இந்நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன் நடத்தப்பட்ட கால்நடை உற்பத்தியும் சுகாதார திணைக்களத்தில் சேவை செய்த அதிகாரிகளும் ஊழியர்களும் தங்களது இந்நியதிச் சட்டத்தின்படி நியமிக்கப்பட்டவர்களாக கருதப்பட வேண்டும்.*

*3. ஊவா மாகாண மாகாண சபையின் கால்நடை உற்பத்தி சுகாதாரமும் பற்றிய விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களின் பொதுவானதும் விசேட மேற்பார்வையின் கீழ் அந்த அமைசசின் செயலாளர் இந்நியதிச் சட்டத்தின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்பார்.*

*அதிகாரம் வழங்கல்.*

*4. இந்த நியதிச் சட்டத்தின் கீழ்மாகாணப் பணிப்பாளர்களுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் 1987 ஆம் ஆண்டு 42 ஆம் இலக்கங் கொண்ட மாகாண சபை ஒழுங்குகளுக்கேற்ப பிரதிப் பணிப்பாளர்களுக்கும் மாகாண பணிப்பாளர் மூலம் அளிக்கமுடியும்.*

திணைக்களத்தின் பணிகள்.

5.1 மாகாண மட்டத்தில் கால்நடை அபிவிருத்தி செயல்திட்டங்களையும் வேலைகளையும் திட்டமிடல் நடைமுறைப்படுத்துதல், மீளாய்வு செய்தல், மதிப்பீடு செய்தல்

5.2 கால்நடை பராமரிப்பு பற்றி புதிய தொழில்நுட்ப அறிவினை மக்களுக்கு வழங்குவதற்காக திட்ட விஸ்தரிப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்.

5.3 கால்நடை நோய்களை இனங்காணல் நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மிருகங்களுக்கு சிகிச்சை அளித்தல், நோய் ஏற்படுவதை தடுத்தலுக்காக கால்நடை சுகாதார சேவை முகாம்களை நடத்துதல். (செல்லப் பிராணிகளும் உட்பட)

5.4 கால்நடை பராமரிப்பு சம்பந்தமான விழிப்பூட்டுச் செயல்பாடுகளை நடத்துவதன் மூலம் மக்களுக்கு கால்நடை உற்பத்தியில் ஊக்கமளித்தல்.

5.5 கமநல நிலையங்களில் கால்நடை மிருகங்களின் தரத்தை மேம்படுத்துவதற்காக செயற்கை முறை சினையூட்டல் போன்ற மேம்பாட்டு சேவைகளை வழங்குதல்.

5.6 நல்ல உயர் ரக பசுக்கள், ஆடுகள், பன்றிகள், கோழிகள் போன்ற விலங்குகளை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுத்தல்.

5.7 புனரமைக்கப்பட்ட புல்லினங்கள், ரனில் வகை உற்பத்திகளுக்காக தேவைப்படும் அலங்காரப் பயிர்களை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பதுற்பட கால்நடை உணவு மேம்பாடு, கால்நடை உணவுற்பத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

5.8 ஊவா மாகாணத்தின் வேறு நிறுவனங்களும் அமைப்புகளின் மூலமும் செயல்படுத்தப்படும் கால்நடை அபிவிருத்தி செயல்பாடுகளின் போது தேவையான தொழினுட்ப, ஆலோசனை சேவைகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

5.9 கால்நடை பராமரிப்பு பற்றிய சட்ட திட்டங்கள் நிபந்தனைகள் என்பவற்றை மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்தல்.

5.10 கால்நடை உற்பத்திகளை சந்தைப்படுத்துதல்களை மேம்படுத்துவதற்காக உற்பத்தியாளர்களின் அமைப்பினை நிறுவுதலும் சம்பந்தப்பட்ட வேறு சேவைகளை வழங்குதலும்.

5.11 கால்நடை உற்பத்தித் துறையிலீடுபட்டிருக்கும் விவசாயிகளையும் அவர்களை ஊக்குவிக்கும் அதிகாரிகளையும் மதிப்பிடுவதற்காக மாகாண மட்டப் போட்டிகளை நடத்துவதும் பரிசு வழங்குவதையும் ஒழுங்குபடுத்துதல்.

6. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களையும் செயல்களையும் நிறைவேற்றுவதற்குத் தேவையான சகல அதிகாரங்களும் எழுத்துமூல சட்டத்திற்குட்பட்டு மாகாணப் பணிப்பாளருக்குரியதாகும். தமக்கு வழங்கப்பட்டுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கேற்ப மாகாணப் பணிப்பாளரால் மாகாண சபையின் பல்வேறு நிறுவனங்களில் உள்ளூராட்சி நிறுவனங்களில் மக்கள் அமைப்புகளில், தனிநபர்களிடமிருந்து ஏதாவது தகவல்களை கேட்க முடியுமென்பதுடன் அந்த நிறுவனங்களும் தனி நபர்களும் அக்குறிப்பிட்ட தகவல்களை வழங்க கடமைப்பட்டுள்ளனர்.

மாகாண ஆலோசனை சபையை நிறுவுதல்.

7. இந்த நியதிச் சட்டத்தின் நோக்கங்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக கால்நடை உற்பத்தியும் சுகாதாரம் சம்பந்தமான விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்காக மாகாண ஆலோசனை சபையை நிறுவப்பட வேண்டும். அக்குறிப்பிட்ட ஆலோசனைச் சபை விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டுமென்பதுடன் அதன் உள்ளடக்கம் கீழே காணப்படுமாறு இருக்க வேண்டும்.

(I) விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர்.
(II) மாகாணப் பணிப்பாளர்.
(III) கால்நடை உற்பத்தியும் சுகாதாரம் பற்றிய மேலதிகப் பணிப்பாளர்.
(IV) கால்நடை உற்பத்தியும் சுகாதாரம் பற்றிய பிரதிப் பணிப்பாளர்கள் இருவர்.
(V) ஊவா மாகாண விவசாயப் பணிப்பாளர்
(VI) கால்நடை உற்பத்தியாளர்களின் சங்கங்களின் பிரதிநிதிகள் இருவர்
(VII) விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் சம்பந்தப்பட்ட விடயத்துறை சார்ந்த பிரதிநிதிகள் இருவர் (இரண்டு மாவட்டத்திற்காக)
(VIII) விவசாயக் காப்புறுதிச் சபையின் பிரதிநிதியொருவர்.
(IX) தேசியக் கால்நடை சபையினால் பெயரிடப்படும் ஒருவர்
(X) "மில்கோ" நிறுவனத்தினால் பெயரிடப்படும் பிரதிநிதி ஒருவர்.

விடயப் பொறுப்பு அமைச்சின் செயலாளர் ஆலோசனைச் சபையின் தலைவராக வேண்டுமென்பதுடன் மாகாணப் பணிப்பாளர் அதன் செயலாளராக பதவி வகிக்க வேண்டும்.

ஆலோசனைச் சபையின் பொறுப்புகளும் கடமைகளும்.

*8.1 இந்நியதிச் சட்டத்தினால் தயாரிக்கப்பட வேண்டுமென்ற ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்துவதற்காக விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகள், பிரேரணைகள், வழிகாட்டல்களை வழங்குதல்.*

*8.2 கால்நடை மிருக சுகாதாரத் துறையில் காலத்திற்கு காலம் வெளியிடப்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வதற்கு தேவைான ஆலோசனைகளையும் பிரேரணைகளையும் முன்வைத்தல்.*

*8.3 நியதிச் சட்டத்தில் கால்நடையும் மிருக சுகாதாரத் துறைக்குரிய விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களாலோ செயலாளர் அவர்களாலோ தமது கவனத்திற்கு கொண்டு வரப்படும் விடயம் அல்லது விடயங்கள் சம்பந்தமாகவும் ஆலோசனைச் சபையினால் ஆலோசனை வழங்கப்பட வேண்டுமென கருதப்படும் வேறு ஏதாவது விடயம் சம்பந்தமாகவும் ஆலோசனை வழங்கலும் அச்சபையின் பொறுப்பாகும்.*

*8.4 ஆலோசனைச் சபையின் செயல் ஒழுங்குகள், கூட்டங்களை கூட்டுதல், நடாத்துதல் என்பவற்றிற்காக ஒழுங்குகளை மேற்கொள்ளல் அமைச்சர் அவர்களின் பொறுப்பாகும்.*

ஆலோசனைச் சபையின் அங்கத்துவம் இரத்தாகுதல்.

*9.1 விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் ஆலோசனை சபையின் அங்கத்தவர் ஒருவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சபையின் உறுப்புரிமையிலிருந்து நீக்கப்பட முடியுமென்பதுடன் அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலம் தமது இராஜினாமாவை ஒப்படைப்பதன் மூலம் ஏதாவது குழு அங்கத்தவர் ஒருவருக்கு உறுப்புரிமையிலிருந்து விலகிக் கொள்ள முடியும்.*

*9.2 ஆலோசனைச் சபையின் தலைவர் அல்லது அங்கத்தவர் ஒருவரின் மோசமான உடல் நிலை அல்லது இலங்கையை விட்டு வெளியே செல்வதால் அல்லது வேறு ஏதாவதுகாரணங்களினால் அல்லது அங்கத்துவப் பதவியில் கடமைகளை நிறைவேற்ற முடியாத சந்தர்ப்பங்களில் அமைச்சர் அவர்களால் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக வேறொருவரை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நியமித்துக் கொள்ள முடியும்.*

*9.3 ஆலோசனைச் சபையின் அங்கத்தவரொருவர் தமது பதவியிலிருந்து இராஜினாமாச் செய்தால் அல்லது பதவியை விட்டு விலகினால் அல்லது அமைச்சர் அவர்களால் பதவியிலிருந்து நீக்கினால் அன்றி நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருட காலத்திற்கு ஆலோசனைச் சபையின் பதவியை வகிக்க வேண்டும் எந்தவொரு காரணத்திற்காகவும் அங்கத்துவம் இரத்துச் செய்யப்படும் ஒருவருக்குப் பதிலாக நியமிக்கப்படும் புதிய அங்கத்தவர் அவ்வாறு விலகல் உறுப்பினரின் மூன்று வருட காலத்தில் எஞ்சியுள்ள காலத்திற்காக மட்டும் உறுப்புரிமையை வகிக்க முடியும்.*

பிரதேச ஆலோசனைக் குழு.

*10. ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தியும் சுகாதார நடவடிக்கைகளுக்கும் அதோடு தொடர்புடைய தேவையான விடயங்கள் சம்பந்தமாக மாகாணப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் மட்டத்தில் இங்கு கீழே குறிப்பிடப்படும் உறுப்பினர்களைக் கொண்ட பிரதேச ஆலோசனை குழுவினை விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமிக்க முடியும்.*

(I) *குழுவின் தலைவர் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவின் பிரதேச செயலாளராக இருக்க வேண்டுமென்பதுடன் பிரிவின் கால்நடை வைத்தியர் அக்குழுவின் செயலாளராக இருக்க வேண்டும்.*

*குழுவின் ஏனைய அங்கத்தவர்களாக.*

(II) *சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் விவசாய உதவிப் பணிப்பாளர்.*
(III) *சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் மிருக அபிவிருத்தி ஆலோசகர்கள்.*
(IV) *கால்நடை உற்பத்தியிலீடுபட்டுள்ள அமைப்புகளின் பிரதிநிதிகள் இருவர்.*
(V) *சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் கமநல சேவை அதிகாரிகள்.*
(VI) *சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்தின் விவசாயக் காப்புறுதி உத்தியோகத்தர்கள்*
(VII) *வியடப் பொறுப்பு அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும்.*

விவசாய அமைப்புகளை பதிவு செய்தல்.

*11. மாகாணத்திற்குள் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பாற் பசும்பண்ணை அமைப்புகள், சுயநிர்ணய பாலுற்பத்தி சங்கங்கள், பாற் பசுவும் ஏனைய விலங்கின பராமரிப்பு விவசாயக் குழுக்கள் அமைச்சர் அவர்களின் வழிகாட்டலின் பேரில் பிரதேச கால்நடை வைத்தியர்களால் பதிவினைப் பெற்றுக் கொள்ள முடியும். அவ்வாறு பதிவு செய்யப்படும் விவசாய அமைப்புகளின் பெயர்ப்பட்டியல் மாகாணப் பணிப்பாளர் அவர்களால் தொடர்ந்து முறையாக செயல்படுத்தப்பட வேண்டும்.*

நிதி ஒதுக்கீடு.

*12. (அ) இந்நியதிச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்படும் நிறுவனங்களின் நிர்வாகத்திற்காகவும் பராமரிப்பிற்காகவும் திணைக்களத்தினால் வருடாந்தம் தயாரிக்கப்படும் அபிவிருத்தி திட்டங்களின் பிரேரணைகளை நடைமுறைப்படுத்தவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை மாகாண சபை வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பெற்றுத் தரப்பட வேண்டும்.*

*(ஆ) எழுத்து மூல சட்ட திட்டங்களுக்கேற்ப திணைக்களத்தின் நடவடிக்கைகளுக்காக உள்ளூர் வெளிநாட்டு பிரவாகத்தின் மூலம் கிடைக்கும் வேறு நிதி ஒதுக்கீடுகளையும் சம்பந்தப்படுத்திக் கொள்ள முடியும்.*

(இ) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்கங் கொண்ட மாகாண சபைகள் சட்டத்தின் 23 ஆவது பிரிவில் சம்பந்தப்பட்ட ஒதுக்கீடுகளுக்கேற்ப கணக்காய்வு நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். கணக்காய்வு நடவடிக்கைகள்.

13.1 வருடமொன்றில் ஊவா மாகாணத்திற்குள் கால்நடை உற்பத்தி சுகாதார சேவை நடைமுறைப்படுத்தப்பட்ட விதம், முகங்கொடுத்த பிரச்சினைகள் அவற்றைத் தீர்ப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளும் சுகாதாரம் பற்றிய முறையாக உள்ளடக்கப்பட்ட வருடாந்த கட்டுப்பாட்டு அறிக்கைகளை குறிப்பிட்ட மூன்று மாதங்கள் முடிவதற்குள் மாகாண பணிப்பாளர் அவர்களால் விடயப்பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். வருடாந்த நிர்வாக அறிக்கை.

13.2 அந்த அறிக்கையை அமைச்சர் அவர்களால் உடனடியாக மாகாண சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14.1 இந்நியதிச் சட்டத்தினால் நிச்சயிக்கப்பட்டுள்ள அல்லது கட்டளையிட அதிகாரமளிக்கப்பட்டுள்ள அல்லது ஏதாவது விடயம் சம்பந்தமாக அமைச்சர் அவர்களால் நிபந்தனைகள் விதிக்க முடியும். கட்டளை விதிக்க முடியுமென்பது.

(I) கால்நடை அபிவிருத்தி பற்றிய கொள்கைகளைத் தயாரித்தல்.
(II) உள்நாட்டு வெளிநாட்டு பிரவாகத்திலிருந்து நன்கொடைகளைப் பெற்றுக்கொள்ளல்.
(III) கால்நடை பராமரிப்பில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு வசதிகளை வழங்குதல்.
(IV) திடீர் விசாரணைகளை மேற்கொள்ளல்.
(V) சிரமக் கொடைகளையும் கொடுப்பனவுகளையும் வழங்குதல்.
(VI) நிறுவன சேவைகளில் திறமை மதிப்பிடல்.
(VII) திணைக்கள நடவடிக்கைகளை ஆராயும் ஒழுங்குகளை மேற்கொள்ளல்.
(VIII) மாகாணத்தின் கால்நடை பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான கட்டளைகளை விதித்தல்.

14.2 4.1 ஆவது உப சரத்தின் கீழ் தயாரிக்கப்படும் சகல நிபந்தனைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டுமென்பதுடன் அவ்வாறு பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து அல்லது நிச்சயிக்கப்படும் திகதியிலிருந்து அவை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

14.3 14.1 ஆவது உப சரத்தின் படி தயாரிக்கப்படும் சகல நிபந்தனைகளும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதன் பின்பு கூடியவிரைவில் அனுமதிக்காக அதை ஊவா மாகாண சபைக்கு அனுப்பப்பட வேண்டுமென்பதுடன், அவ்வாறு அனுமதிக்கப்படாத ஏதாவது நிபந்தனைகளிருப்பின், அவை அனுமதிக்கப்படாத திகதியிலிருந்து இரத்துச் செய்யப்பட்டதாக கணக்கிடப்பட வேண்டுமெனினும் அந்த கட்டளையின் கீழ் எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைகளும் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படக் கூடாது.

14.4 ஏதாவது கட்டளையொன்று அவ்வாறு இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்படும் திகதி வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும்.

15. இந்நியதிச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முந்திய தினத்திலிருந்து கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய விடயத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஏதாவது சொத்துக்கள்/அதிகாரங்கள் அல்லது உடைமைகள் அல்லது மனிதவலு பயன்படுத்தப்பட்டிருப்பின் அல்லது மாதிரிப்படிவம், விளம்பரம், உறுதிப்பத்திரம், பட்டியல் அல்லது அது போன்ற எழுத்தாவணங்கள் பயன்படுத்தப்பட வேண்டுமென கட்டளையிடப்பட்டிருப்பின் அவை அனைத்தும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அரசினால் வழங்கப்பட்டதாக அல்லது வேறு வழிகளில் கிடைத்ததாக இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்களாகவும் உடமைகளாகவும் கருதப்பட வேண்டும். சொத்துக்களும் கடமைகளும்.

16.1 இந்நியதிச் சட்டத்தினால் அல்லது அதன் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள ஏதாவதொரு கட்டளைகளை அல்லது பணிப்புரைகளை மீறுதல் அல்லது அப்பணிப்புரைகளுக்கேற்ப செயல்படாது விடல் அல்லது இந்நியதிச் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட பணிப்புரைகளின் ஏதாவது விடயத்தை செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒருவருக்கு அதை செய்யவிடாது வேண்டுமென்றே இடையூறு செய்தல் எழுத்து மூல சட்ட விதிமுறைகளுக்கேற்ப இந்நியதிச் சட்டத்தின்படி குற்றமாகும். நியதிச் சட்டத்தின் ஒழுங்கு விதிகளை மீறுதல் சம்பந்தமான.

16.2 இந்நியதிச் சட்டத்தின் கீழ் குற்றமிழைக்கும் சகலரும் மஜிஸ்ரேட் ஒருவரின் முன் நடத்தப்படும் வழக்கு விசாரணையில் குற்றவாளியாக்கப்பட்டால் இரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதத்திற்கோ அல்லது இரண்டு வருட கால அல்லது இரண்டு விதத்தில் ஒன்றின்படி சிறையிலிடல் அல்லது இரண்டு தண்டனைகளுக்கும் கீழ்ப்படிதல் வேண்டும்.

17.1 1. "ஆளுநர்" எனப்படுவது ஊவா மாகாணத்தின் ஆளுநர் எனப் பொருள்படும். பத விளக்கம்.

2. "அமைச்சர்" எனப்படுவது ஊவா மாகாணத்தின் கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய விடயப் பொறுப்பு அமைச்சர் எனப் பொருள்படும்.

3. "மாகாணம்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஊவா மாகாண அதிகாரப் பிரதேசம் என பொருள்படும்.

4. "மாகாண சபை" எனப்படுவது ஊவா மாகாண சபை எனப் பொருள்படும்.

5. "கால்நடை உற்பத்தி சுகாதார சேவைகள் பணிப்பாளர்" எனப்படுவது இந்த நியதிச் சட்டத்தின் 2.1 சரத்தின் கீழ் நியமிக்கப்படும் அதிகாரி எனப் பொருள்படும்.


6. மாகாண சபை கலைக்கும் தருணத்தில் மீண்டும் மாகாண சபையொன்று அமைக்கும் வரை இந்த நியதி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்பது குறித்த சகல விடயம் சம்பந்தமாக ஊவா மாகாண ஆளுநர் எனப் பொருள்படும்.
கொல்வதற்கு பொறுத்தமற்ற மிருகங்களை கொல்வதை தடுப்பது எனப் பொருள்படும்.

7. "செல்லப் பிராணிகள்" என்பது வீட்டில் வளர்க்கும் நாய், பூனை, பறவைகள், செல்லப் பிராணிகளாக வளர்க்கப்படும் வேறு உயிரினங்கள் எனப் பொருள்படும்.

பொருள் விளக்கம்.

18. இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ், ஆங்கில மொழிப் பதங்களுக்கிடையின் ஏதாவது ஏற்புடமை காணப்படாவிடின் சிங்கள மொழிப் பிரவாகம் வலுவுடையதாக இருக்கும்.

**மாகாண கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் அமைச்சின் அமைப்பு வியூகம்**




7-205/1

---

**இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் ...... ஆம் இலக்கம் கொண்ட விவசாய அபிவிருத்தி கொள்கைச் சுருக்கப்பிரதி

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு 10 நாட்கள் கடந்த பின்னர் ஊவா மாகாண சபைக்கு முன்வைப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை அடங்கிய விடயங்கள் சம்பந்தமாக ஏதாவது விடயம் முன்வைப்பதற்கு எதிர்பார்ப்பதாயின் இந்த அறிவித்தலின்படி 10 நாட்களுக்குள் அந்த விடயம் எனக்கு அறிவிக்க வேண்டும்.

அநுர ரவிந்திர விதானகமகே,
விவசாய, கமநல அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி,
நன்னீர் மீன்பிடித்துறை, சுற்றாடல் மற்றும் சுற்றுலாத்துறை
நடவடிக்கைகள் பற்றிய அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

**ஊவா மாகாண மாகாண சபையின் 2010 ஆம் ஆண்டின் ......... ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண விவசாய அபிவிருத்தி நியதிச் சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் 9 ஆவது உப அட்டவணையின் 1 வது பட்டியலின் 09 இன் படி அளிக்கப்பட்டுள்ள அதிகாங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஊவா மாகாண விவசாயத் திணைக்களமொன்றை நிறுவுதலும் அதோடு தொடர்புடைய விடயங்களை ஒழுங்கமைப்பதற்கான நியதிச் சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண மாகாண சபையினால் இவ்வாறு விதந்துரைக்கப்படு கிறது.

1. இந்த நியதிச் சட்டம் 2008 ஆம் ......... ஆண்டின் ஆம் இலக்கம் கொண்ட ஊவா மாகாண விவசாய அபிவிருத்தி நியதிச் சட்டமென்று அழைக்கப்படுவதுடன் ஊவா மாகாணத்தின் ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்த திகதியிலிருந்தோ அல்லது நிச்சயிக்கப்படும் வேறொரு தினத்திலிருந்தோ நடைமுறைப்படுத்தப்படும். சுருக்கப் பெயரும் அமுலாகும் திகதியும்.

2. புதிய விவசாய தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு விஸ்தரிப்பு நடவடிக்கைகளில் மாகாணத்தின் விவசாய அபிவிருத்தியை நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காகவும் விவசாயிகளின் வாழ்வாதார நிலைமையை மேம்படுத்தும் நோக்கமாக பரந்தளவிலான வேலைத்திட்டமொன்றை ஏற்பாடு செய்து கொண்டு நடத்துவதற்குத் தேவையான நிதியினை ஏற்பாடு செய்தலும் இந்நியதிச் சட்டத்தின் நோக்கமாகும். நோக்கம்.

3. இந்நியதிச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் அதை நடைமுறைப்படுத்துவதற்காகவும் மாகாண விவசாயத் திணைக்களமொன்றையும், மாவட்ட அலுவலகம், வலய அலுவலகம், பிரதேச அலுவலகம் போன்ற தொகுதிகள் நிறுவப்படும். அலுவலகத் தொகுதியினை ஏற்படுத்துதல்.

4. விவசாய விஸ்தரிப்பு, மேம்படுத்துதலும் விவசாய சேவையை பிரமிக்கும் விதத்தில் மாகாணத்திற்குள் நடத்துவதற்குமாக இதுவரை மாகாணத்திற்குள் சேவையிலீடுபட்ட விவசாயத் திணைக்களத்திற்குரிய அனைத்து சேவைகளினதும் ஆளணியினர் அவர்களது விருப்பத்தை தெரிவிப்பதன் மூலம் மாகாண அரச சேவை ஊழியர்களாக இனங்காணப்பட வேண்டும். ஆளணியினர்.

5. மேலே 3 ஆவது சரத்தின் பிரகாரம் ஏற்பாடு செய்யப்படும் அலுவலகத் தொகுதிக்குத் தேவையான மனித வளங்கள் 4 ஆவது சரத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரிகளைக் கொண்டு நியமிக்கப்பட வேண்டும். அந்த அதிகாரிகள் ஊவா மாகாண ஆளுநர் அவர்களால் அல்லது சம்பந்தப்படட அதிகாரிகளால் அந்தந்த பதவிகளுக்கு நியமிக்கப்படுவர்.

6. 1(அ) சம்பிரதாய தேசிய பயிரினங்களுக்குப் போல புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள பயிரினங்களுக்கும் ஏற்ற வலயங்களை இனங்கண்டு அதன்படி சம்பந்தப்பட்ட பயிர்ச்செய்கையை விரிவாக்குதலையும் இலக் காகக் கொண்டு துறை சார்ந்த விசாலிப்பு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்து நடைமுறைப்படுத்துதல். விவசாயத்துறை.

(ஆ) புதிய பொருளாதார பயிர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் வழிகாட்டலை மேற்கொண்டு மாகாணத்திற்குள் மாதிரிப் பயிர்ச்செய்கையை மேற்கொண்டு நடத்திச் செல்வதன் மூலம விவசாயிகள் அந்த உபாய வழிகளை பின்பற்ற ஊக்குவிப்பதும், அதனூடாக குடும்பமொன்றின் வருமானத்தை உயர்த்துதல்.

(இ) பயிர்ச்செய்கை நிலங்களை அதிகரிப்பதை விட தற்போதுள்ள நிலங்களைப் பயன்படுத்தி வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வேண்டியதன் முக்கியத்துவத்தை விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தி அதன் மூலம் ஏற்படும் பொருளாதார நன்மைகள் பற்றி விளக்கமளித்தல்.

(ஈ) தேசிய விவசாய உற்பத்தியில் ஊவா வலயத்தினை சரியாக இனங்கண்டு அதன் உற்பத்தித்தன்மையை நோக்காகக் கொண்ட விஸ்தரிப்பு வேலைத்திட்டமொன்றை நீண்ட காலம் நிலைத்திருக்கக்கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்துதல்;

(உ) விவசாயத்தோடு தொடர்புடைய பயிர்ச்செய்கை, பயிரினம், வருடந்தோறும் போகங்களுக்குரிய உற்பத்தி எதிர்பார்க்கப்படும் இலக்குகள் பற்றிய தகவல்கள் அடங்கிய கணனிப் புள்ளி விபரத் தொகுதியொன்றினை ஏற்படுத்தி தொடர்ந்து நடத்திச் செல்லல்.

(எ) சிறு விவசாயக் குழுக்களை அமைப்பதன் மூலம் விவசாய அதிகரிப்பு நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல்.

6.2 (அ) விவசாயத் துறையின் மேம்பாட்டிற்காக தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தப்படும் புதிய தொழில்நுட்ப செயல் முறைகளை மாகாணத்திற்குள் துரிதமாக கொண்டு செல்ல முயற்சிப்பதன் மூலமும், அச் செயல்முறைகளை விவசாயிகளுக்கு முறையாக அறிந்து கொள்ள சந்தர்ப்பமளிப்பதன் மூலமும் அவற்றிலிருந்து கிடைக்கும் நன்மைகள் பற்றி அறிந்து கொள்ள இடமளித்தல்; விவசாய முன்னேற்றம்.

(ஆ) கூடிய கேள்வியும் அதிக பொருளாதார இலாபமும் உள்ள புதிய பயிர்களை அறிமுகம் செய்யும் பரந்தளவிலான வேலைத்திட்டங்களுக்கு திணைக்களத்தோடு தொடர்புடைய வேலைத்திட்டங்களுக்கு முன்னுரிமையை வழங்குதல்;

(இ) இரசாயன உரப்பாவனையையும் கிருமிநாசினி பாவனையையும் முறைப்படியொன்றாக்கவும் அதற்குப் பதிலாக அசேதனப் பசளைகளையும் உள்ளூர் கிருமிநாசினி முறையிலான பாவனையையும் பிரபல்யப்படுத்துவதற்கும் வயல் வெளிபரப்புகளின் எண்ணிக்கையை அதிகரித்து அத்துறையின் மீதான கேள்வியை அதிகரிக்கக்கூடிய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துதல்;

(ஈ) புதிய இன இனவிருத்திக்கேற்ற தரமான விதைகளையும் ஒட்டுப்பயிர் பொருட்களையும் உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்து பகிர்ந்தளித்தல், சேவை வசதிகளை இலகுவாக்குதல்;

(உ) பயிர்தொகுதிகளாக (Block) பயிர் செய்கைத் துறையை நிறுவுதல் ;

(ஊ) ஒட்டுமுறைப் பயிர் செய்கை போன்ற புதிய தொழில்நுட்ப முறைகளின் மூலம் முன்னேற்றப்படும் விடயங்களை விவசாயிகளுக்கு இலகுவாகவும் வசதியாகவும் பெற்றுக் கொள்ள சந்தர்ப்பமளித்தல்;

(எ) விவசாயத்தோடு தொடர்புடைய கைத்தொழிலை அறிமுகம் செய்தலும் அந்த உற்பத்திகளை சந்தைக்கு விடல் ;

(ஏ) வீட்டுத் தோட்ட அபிவிருத்திக்கேற்ற தேனி வளர்ப்பு வர்த்தக பூப்பயிர்ச் செய்கையை மேம்படுத்த ஒத்துழைத்தல்.

ஆய்வுகளும் ஆராய்ச்சிகளும்.

6.3 (அ) திட்டமிடப்பட்ட காணிப் பயன்பாடுகளும் விஞ்ஞான பூர்வமான நீர்ப்பாசன முகாமைத்துவம் பற்றிய செயலமர்வுகளை ஏற்பாடு செய்தல்;

(ஆ) தொடர்ச்சியாக விருத்தியடையும் புதிய தொழில்நுட்பத்தையும் செயல் முறைகளையும் அதிகாரிகளுக்கும் விவசாயிகளுக்கும் கிட்டக்கூடியவாறாக செயலமர்வுகளை ஏற்பாடு செய்தலும் அதற்காக விவசாயிகளின் செயல்திறன் மிக்க பங்களிப்பை உறுதி செய்தல் ;

(இ) பிரதேசத்தின் காலநிலைத்தன்மை கிருமிகள், மண்ணின் தன்மையையும் பயிர்ச்செய்கை முறையையும் அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளை மேற்கொள்ளலும் அதன்பெறுபேறுகளின்படி செய்யப்படும் பணிப்புரைகளை சம்பந்தப்பட்டவர்களுக்கு பெற்றுக் கொடுத்தல் ;

(ஈ) பின் அறுவடை தொழில்நுட்பத்திற்கும் முன் ஒப்பந்த உற்பத்தியில் பல்வேறு இடைவெளிகளும் பற்றிய பரந்த தெளிவினைப் பெற்றுக் கொடுத்தலும் ஆகக்கூடிய நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் வழிவகைகள் பற்றி தெளிவு படுத்துதலும் அதற்குத் தேவையான பயன்பாடுகள் உற்பத்தியினை இலகுவாக்கல்;

(உ) விவசாய உற்பத்திப் பொருட்களை நீண்ட காலம வைத்துக் கொள்ளும் முறைகளை அறிமுகம் செய்வதற்காக தேசிய வெளிநாட்டு அரச சார்பற்ற அமைப்புகளின் ஒத்துழைப்புகளையும் வளங்களையும் ஆகக் கூடிய விதத்தில் பயன்படுத்துதல்;

(ஊ) மாகாணத்தின் இயற்கை வளங்களை கட்டுப்படுத்திக் கொள்ளலும் அதற்கேற்ப முறையான முகாமைத்துவ முறையினை அறிமுகம் செய்தலும்.

மாவட்ட விவசாய குழு.

7.1 மாதாந்த மாவட்ட விவசாயக் குழுவின் கட்டயமான அங்கத்தவரான மாகாண விவசாய செயலாளர் அவர்கள் தற்போது அக்குழுவின் தலைமை வகிக்கும் மாவட்டட செயலாளருடன் அக்குழுவின் சமமான தலைமைப் பொறுப்பை வகிக்க வேண்டும். பிரதி விவசாயப் பணிப்பாளர் அதன் செயலாளராக பதவி வகிப்பார்.

7.2 பிரதேச செயலாளரின் தலைமையில் நடத்தப்படும் பிரதேச விவசய குழுவிற்கு அந்த பிரிவில் சேவையிலீடுபட்டிருகும் விவசாய துறையின் சகல உத்தியோகத்தர்களுக்கும் கட்டாயமாக பங்குபற்றுதலை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

8. மாகாண விவசாய அமைச்சர் அவர்களின் இணக்கப்பாட்டுடன் மாகாணத்திற்காக 19 அங்கத்தவர்களுக்கு குறையாத எண்ணிக்கையைக் கொண்ட ஆலோசனைக் குழுவொன்று நிறுவப்பட வேண்டும்:-

(1) அக்குழுவின் தலைவராக விவசாய செயலாளர் அவர்கள் செயல்பட வேண்டும் ;
(2) அக்குழுவின் செயலாளர் மாகாண விவசாய பணிப்பாளராக இருக்க வேண்டும்;

(3) பதுளை, மொனறாகலை மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்கள் இருவர்;
(4) பதுளை, மொனறாகலை மாவட்டங்களின் பிரதி விவசாயப் பணிப்பாளர்கள் இருவர்;
(5) கமநல சேவை பிரதி ஆணையாளர்கள் இருவர்;
(6) கால்நடை உற்பத்தியும் சுகாதாரமும் பற்றிய மாகாணப் பணிப்பாளர்கள் ;
(7) பதுளை, மொனறாகலை மாவட்டங்களின் காணிப் பயன்பாட்டு திட்டமிடல் அதிகாரிகள் இருவர்கள் ;
(8) அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் கமநல சேவை குழுக்களின் பிரதிநிதிகள் நால்வரும் விவசாய நடவடிக்கைகள் பற்றி பரந்த அனுபவமுள்ள வேறு அதிகாரிகள் ஆறு பேர்;
(9) புள்ளி விபரத் திணைக்களத்தின் மாவட்ட அதிகாரிகள் இருவர்.

ஆலோசனைக் குழுவின் கடமைகளும் பொறுப்புகளும்.

9.1 இந்நியதிச்சட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிடப்படும் நடைமுறைகளை அமுல்படுத்தும் போது விடயப் பொறுப்பு அமைச்சருக்குரிய ஆலோசனைகளை பிரேரணைகள் வழிகாட்டல்;

9.2 விவசாயத்துறையில் காலத்திற்குக் காலம் ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்காக விடயப் பொறுப்பு அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல் ;

9.3 விவசாயத்துறைக்கேற்ப அமைச்சர் அவர்களால் அல்லது செயலாளர் அவர்களால் கவனத்திற்கு கொண்டு வரப்படும் விடயம் அல்லது விடயங்கள் சம்பந்தமாகவும் குழுவினால் ஆலோசனை வழங்கப்பட வேண்டுமென கருதப்படும் வேறு விடயங்கள் சம்பந்தமாகவும்;

9.4 ஆலோசனைக் குழுவின் விடயப்பொறுப்புகள் கூட்டங்களைக் கூட்டுதல், நடத்துவதற்கான ஏற்பாடுகளை செய்வது அமைச்சின் செயலாளரின் கடமையாகும்.

குழுவின் உறுப்புரிமை இரத்தாகுதல்.

10.1 குழுவின் அங்கத்தவர்களால் அமைச்சர் அவர்களால் பெயரிடப்படும் அங்கத்தவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அப்பதவியிலிருந்து நீக்கப்பட முடியுமென்பதுடன் அமைச்சர் அவர்களுக்கு எழுத்து மூலம் தமது இராஜிநாமாவை சமர்ப்பிப்பதன் மூலம் யாராவது ஒரு குழு அங்கத்தவருக்கு பதவியிலிருந்து இராஜிநாமா செய்ய முடியும்;

10.2 குழுவின் தலைவர் அல்லது வேறு அங்கத்தவர்களின் மோசமான தேகாரோக்கியம் சம்பந்தமாக அல்லது இலங்கையிலிருந்து வெளிநாட்டிற்கு போவதாலோ அல்லது வேறு காரணங்களினாலோ பதவியில் கடமைபுரிய முடியாத சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களால் அப்பதவியில் பதில் கடமை புரிவதற்காக வேறு சிலரை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நியமிக்க முடியும்;

10.3 குழுவின் அங்கத்தவரொருவர் தமது பதவியிலிருந்து இராஜிநாமாச் செய்தால் அல்லது பதவியை கைவிட்டுச் சென்றால் அல்லது அமைச்சர் அவர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டால் அன்றி நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடகாலம் அப்பதவியை வகிக்க வேண்டும்.

பிரதேச ஆலோசனைக் குழு.

11.1 மாகாணத்தின் ஏதாவதொரு பிரிவில் விவசாய நடவடிக்கைளும் அதற்குத் தேவையான விடயங்கள் சம்பந்தமாக மாகாணப் பணிப்பாளருக்கு ஆலோசனை வழங்குவதற்காக பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் இங்கு கீழே கொடுக்கப்படுபவர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட வேண்டும் :-

11.2(அ) பிரதேச செயலாளர்;
(ஆ) பிரதேச சபையின் தலைவர்;
(இ) பிரிவின் சகல கமநல சேவை குழுக்களில் தலைவர்கள் ;
(ஈ) பிரிவின் சகல கமநல சேவை பிரதேச அதிகாரிகள் ;
(உ) பிரிவின் சகல விவசாய ஆலோசகர்கள் ;
(ஊ) பிரிவின் கமநல சேவை குழுவின் அதிகாரப் பிரதேசத்திலிருந்து ஒரு கிராம சேவை உத்தியோகத்தர் ஒருவர் வீதம்.

11.3 குறிப்பிட்ட பிரிவின் பிரதேச ஆலோசனைக் குழுவின் தலைவராக இருக்க வேண்டும். செயலாளர் பதவி பிரிவில் விவசாய ஆலோசகர் ஒருவராக இருக்க வேண்டும்.

11.4 பிரதேச ஆலோசனைக் குழுவில் செயலாளர் பதவிக்கு அதன் அங்கத்தவர்களில் ஒருவர் அரச திணைக்களத்தில் அல்லது அதிகார சபையொன்றின் உத்தியோகத்தர் ஒருவர் குழுவின் முதலாவது கூட்டத் தொடரின் முதல் கூட்டத்திலேயே தெரிவு செய்யப்பட வேண்டும்.

11.5 விவசாயப் பணிப்பாளர் அல்லது பிரதிப் பணிப்பாளரால் பிரதேச ஆலோசனைக் குழுவொன்றில் கவனத்திற்கு கொண்டுவரப்படும் சகல விடயங்கள் சம்பந்தமாக அந்த ஆலோசனைக் குழு நிச்சயிக்கப்படும் காலத்திற்குள் முறையாக செயல்பட்டு முடிக்கப்பட வேண்டும்.

பொது விடயங்கள்.

12. (அ) கிருமிநாசினி சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்;
(ஆ) உரச் சட்டத்தையும் மண் பாதுகாப்பு சட்டத்தையும் நடைமுறைப்படுத்துதல்

(இ) விதைகள் சட்டத்தை அமுல்படுத்துதல்
(ஈ) விவசாயத்திற்குரிய வேறு இடைச்சட்டங்கள்

அமைச்சர் அவர்களுக்கு நிபந்தனை விதிக்க முடியுமென்பது.

*13.1* இந்நியதிச் சட்டத்திலுள்ளவற்றை நடைமுறைப்படுத்துவதற்காக மாகாண சபையின் அனுமதியுடன் நிபந்தனைகளை விதித்தல் அமைச்சர் அவர்களால் மேற்கொள்ளப்படும்.

அமைச்சர் அவர்களின் அதிகாரங்கள்.

*13.2* இந்நியதிச் சட்டத்தில் அல்லது இந்த நியதிச் சட்டத்தின் கீழ் விதந்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு மேலதிகமாக மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அவர்கள் அல்லது மாகாண விவசாயப் பணிப்பாளர் அல்லது அவரது உத்தியோகத்தர்களால் அவர்களது விருப்பத்திற்கேற்ப முன்வைக்கப்படும் விதகிள், முடிவுகள் மேன் முறையீட்டின் மூலம் அது இல்லாதவிடத்து இல்லாமலாக்கும் அதிகாரம் அமைச்சர் அவர்களின் முடிவே இறுதி முடிவாக வேண்டுமென்பதுடன் அதை செயல்படுத்துவது அமைச்சின் செயலாளர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு மாகாண பணிப்பாளர் அல்லது அவரது கீழுள்ள அதிகாரிகளும் அத்தீர்மானத்திற்குரிய சகலரும் கடமைப்பட்டுள்ளனர்.

பொருள் விளக்கம்.

*14.* பதவிளக்கம் சம்பந்தமாக வேறு விளக்கம் வேண்டுமென்று கேட்டாலன்றி இந்நியதிச் சட்டத்தில் :-

* "மாகாண சபை" எனப்படுவது ஊவா மாகாண சபை என பொருள்படும்
* "ஆளுநர்" எனப்படுவது ஊவா மாகாணத்தின் ஆளுநர் எனப் பொருள்படும்.
* "அமைச்சர்" எனப்படுவது ஊவா மாகாணத்தின் விவசாய பொறுப்பு அமைச்சர் எனப் பொருள்படும்.
* "செயலாளர்" எனப்படுவது மாகாணத்தின் விவசாய அமைச்சின் செயலாளர் எனப் பொருள்படும்.
* "பிரதேச செயலாளர்" எனப்படுவது அந்தந்த பிரதேச செயலாளர் பிரிவுகளின் நிர்வாகத் தலைவர்கள் எனப் பொருள்படும்.
* "திணைக்களம்" எனப்படுவது மாகாண விவசாயத் திணைக்களம் எனப் பொருள்படும்.
* "மாகாணப் பணிப்பாளர்" எனப்படுவது மாகாண விவசாயப் பணிப்பாளரும் இந்நியதிச் சட்டத்தின் கீழ் அதிகாரங்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதற்காக பணிப்பாளர்களாக அதிகாரம் வழங்கப்பட்டவர்கள் எனப் பொருள்படும்.
* "பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள்" எனப்படுவது பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர்கள் எனப் பொருள்படும்.
* "மாகாண விவசாய ஆலோசனைக் குழு" எனப்படுவது 8 ஆவது சரத்தின் கீழ் நியமிக்கப்படும் மாகாண ஆலோசனைக் குழு எனப் பொருள்படும்.
* "பிரதேச விவசாய ஆலோசனைக் குழு" எனப்படுவது 11 ஆவது சரத்தின் கீழ் நியமிக்கப்படும் மாகாண ஆலோசனைக் குழு எனப் பொருள்படும்.

பதவிளக்கம்.

*15.* இந்நியதிச் சட்டத்தின் சிங்களம், தமிழ், ஆங்கில பொருள் விளக்கங்களுக்கிடையில் அல்லது பிரயோகத்தில் ஏதாவது பிரதிகூலங்கள் ஏற்படுமிடத்து சிங்கள மொழி பதமே வலுவிலிருக்கும்.

7-205/2

---

# பதவிகள் - வெற்றிடம்

## மேல் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வாளர் பிரிவில் பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வாளர்) பதவிக்கான ஆட்சேர்ப்பு

மேல் மாகாண, பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வாளர் பிரிவில் பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வாளர்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக இவ் அறிவித்தலின் 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, மேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. **காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கை:** 01 ஆகும்.

**குறிப்பு** - இந்த நியமனம் சம்பந்தமாக இறுதி தீர்மானம் எடுப்பது மேல் மாகாணத்தின் கௌரவ ஆளுநர் அவர்களுக்கே உரித்துடையதாகும். மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வாளர் பிரிவுக்கு நியமனம் கிடைக்கப்பெறும் உத்தியோகத்தர் நியமனம் கிடைத்த திகதியிலிருந்து வேறு எந்தவொரு சேவைக்கும் உரியவரல்லாதவராக இருத்தல் வேண்டும்.

2.1 அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 06/2006 க்கு அமைய இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத் திட்டம் : ரூபா 22,935 - 10 × 645 - 8 × 790 - 17 × 1,050 - ரூபா 53,555 ஆகும். (எஸ்எல் - 1-2006 இன் 22 வது படி)

2.2. வயதெல்லை.- அரசாங்கம்/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு வயதெல்லை ஏற்புடையதன்று.

2.3 சேவை நிபந்தனை .- அனுமதிக்கப்பட்ட சேவை பிரமாணங்களுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும். இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும்.

3. **தகைமைகள்:**

(அ) மேல் மாகாணத்தை நிரந்தர விதிவிடமாகக் கொண்டிருத்தல்

மற்றும்

(ஆ) 3 ஆண்டுகள் சேவைக்காலத்தை கொண்டிருப்பதுடன் மேல் மாகாணத்தின் பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வாளர் பிரிவில் II ஆம் வகுப்பு உத்தியோகத்தராக இருத்தல்;

அல்லது

(இ) இலங்கை கணக்காளர் சேவையின் I ஆம் வகுப்பு உத்தியோகத்தராக இருத்தல் ;

அல்லது

(ஈ) இலங்கை கண்காய்வாளர் சேவையில் I ஆம் வகுப்பு II ஆம் தர உத்தியோகத்தராக இருத்தல்.

04. **ஆட்சேர்ப்பு முறை**.- விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள, மேலுள்ள 03 ஆம் பந்திக்கு அமைய தகைமை பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் ஒழுங்குமுறையிலான நேர்முகப் பரீட்சைக்குழுவின் ஊடாக நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவதன் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

5. **விண்ணப்பிக்கும் முறை:** இவ் அறிவித்தலின் இறுதியிலுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 அளவு கடதாசியில் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 2010.07.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் செயலாளர், மாகாண அரச சேவை ஆணைக்குழு (மே.மா.) சுதந்திர சதுக்கம், கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்)" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறு செய்வதற்கு தவறும் விண்ணப்பதாரிகள் பொருத்தமற்றவர்களாக கணிக்கப்படும். விண்ணப்பம் கிடைத்தது பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. (அரசாங்க/மாகாண அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அமைச்சின் செயலாளர்/ திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும் தாமதித்து கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

6. **ஏனைய நிபந்தனைகள்**.- மேல் மாகாண கணக்காய்வளர் சேவைக்கான கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஆட்சேர்ப்பு படிமுறைகளின் பல நிபந்தனைகளுக்கும் நீர் கீழ்ப்படிதல் வேண்டும்.

7. அறிவித்தலிலுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க வேண்டும் என மேலுள்ள கட்டளையின்படி 2010.07.31 ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட சகல விண்ணப்பதாரிகளும் நேர்முகப் பரீட்சை ஒன்றுக்கு அழைக்கப்படுவர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகள் இந்த பதவிக்காக தகைமைகளை பூர்த்தி செய்திருப்பவர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளனர் என கருதப்படமாட்டாது. எத்தகைய சந்தர்ப்பத்திலும் அறிவித்தலுக்கு அமைய தேவையான தகைமையை கொண்டிருக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டால் நியமனம் கிடைப்பதற்குள்ள உரிமை இரத்துச் செய்யப்படும். சகல விண்ணப்பதாரிகளும் பதவிக்குரிய அனைத்து தகைமைகளையும் 2010.07.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருப்பது கட்டாயமாகும்.

8. விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலுக்கு உரிய விடயங்கள் அல்லது அவ் அறிவித்தலில் உறுதிப்படுத்தப்படாத வேறு விடயங்கள் தொர்பாக மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

வி. ராஜபக்ஷ,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2010, யூன் .....

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மேல் மாகாண பிரதம செயலாளர் அலுவலகத்தில் உள்ளக கணக்காய்வுப் பிரிவில் பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வாளர்) பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்தல்**

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

(ஆ) முழுப்பெயர் :----.

2. பிறந்த திகதி :-----.

3. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-----.

4. தொலைபேசி இலக்கம் : அலுவலக :-----. தனிப்பட்ட:-----.

5. தற்போது சேவையாற்றும் நிலையம் மற்றும் முகவரி :-----.

6. சேவையாற்றும் நிலையத்துக்குரிய அமைச்சு/திணைக்களம் :-----.

7. நிரந்தர முகவரி :-----.

8. 2010.07.31 ஆந் திகதியன்று மேல்மாகாணத்தினுள் வாழ்ந்த கால எல்லை :
ஆண்டுகள் :-----. மாதங்கள் :-----. நாட்கள் :-----.

9. விண்ணப்பம் கோரப்பட்ட அறிவித்தலின் 03 ஆம் பந்திக்கு அமைய-

(I) தற்போது வகிக்கும் பதவி :-----.
(சேவை/வகுப்பு மற்றும் தரம் என்பவற்றைக் குறிப்பிடவும்)

(II) அப்பதவிக்கு நியமனம் பெற்ற திகதி :-----.
2010.07.31 ஆந் திகதியன்று அப்பதவியில் இருந்த சேவைக்காலம்

10. (I) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவைக்குரிய உத்தியோகத்தரா என்பது
(II) மாகாண அரசாங்க சேவைக்கு உள்வாங்கப்பட்டு இருப்பின் அதுபற்றி மற்றும் உள்வாங்கப்பட்ட திகதியை குறிப்பிடவும் :-----.

11. 2010.07.31 ஆந் திகதிக்கு அண்மித்த ஐந்து ஆண்டுகளில் சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளீர்களா? :-----.

12. உங்களது சேவைக்காலத்தினுள் ஏதாவது சந்தர்ப்பத்தில் உங்களுக்கு எதிராக ஒழுக்காற்று தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) உட்பட்டுள்ளீரா? அவ்வாறாயின் அது தொடர்பான விபரங்களைக் குறிப்பிடவும்.

13. 2010.07.31 ஆந் திகதிக்கு அண்மித்த ஐந்து வருடங்களினுள் நீர் சம்பளமற்ற லீவு பெற்றுள்ளீரா?
அவ்வாறாயின் அதுபற்றி விபரிக்கவும் :-----.

14. ........................ ஆகிய என்னால் இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டிய வரை மற்றும் உண்மைத் தன்மக்கும் ஏற்ற வகையில் உண்மையானதும் மற்றும் சரியானதுமென உறுதிமொழிகின்றேன். என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றது என கண்டுபிடிக்கப்பட்டால் மேல் மாகாணத்தின் உள்ளகக் கணக்காய்வாளர் பிரிவின் பணிப்பாளர் பதவிக்கான தகைமையை ஏற்றுக்கொள்ளப்படாது இருப்பதுடன் எனக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு முடியும் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

-------------------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

திகதி :----.

**நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

மேலுள்ள விண்ணப்பத்தை சமர்ப்பித்திருக்கும் திரு./ திருமதி/ செல்வி .................................................................. என்பவர் இவ் அலுவலகத்தில் ..................................... (பதவி மற்றும் தரம்) சேவை உத்தியோகத்தர் என்பதையும் எனது முன்னிலையில் ....................... திகதி மேலுள்ள கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-------------------,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடவும்).

திகதி :----.

**அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

திரு./திருமதி/செல்வி .................................. என்பவர் .................................................................... தற்போது இவ் அமைச்சில் /
(பதவி மற்றும் தரம்)
திணைக்களத்தில் சேவையாற்றுகின்றார் என்பதையும் சுய விபரக்கோவைக்கு அமைய விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவை என்றும் அவரது சேவை திருப்தியானது என்றும் இப்பதவிக்காக தெரிவு செய்யப்பட்டால் அவர் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்று சான்றுப்படுத்துகின்றேன்.

-------------------,
அமைச்சின் செயலாளர்/திணைக்களத் தலைவரின் கையொப்பம்.
பதவி முத்திரை:

திகதி :----.

7-308

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.